**தலைப்பு 117 – உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.
தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றேவிட்டுவிடுதல் அல்லது உள்ளககட்டுப்பாட்டைதவிர்ப்புச்செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. அது போன்று, இவ் அறிக்கை நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக் கூற்றுக்களின் சுற்று நிருப ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதி அல்லாச் சொத்துக்களின் அறிக்கையிடலின் போது தனிப்பட்ட சொத்தின் பெறுமதிகள் அந்த சொத்துக்களின் முதன்மை பேரேட்டு மீதிகளுடன் சரிபார்த்திருக்கவில்லை. | தனிப்பட்ட மீதிகள் அந்த சொத்துடன் தொடர்புடைய முதன்மை பேரேட்டு மீதிகளுடன் 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்று நிருபத்தின் பிரகாரம் இணக்கஞ் செய்யபபட வேண்டும். | நிதி மற்றும் வெகுஜன ஊடகங்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சொத்து சுற்றுநிருப இல 01/2017 இன் பிரகாரம் தகவல்கள் கட்டுப்பாட்டு தலைமை அதிபதி அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. காணி மற்றும் கட்டிடம் மற்றும் வாகனங்களின் தனிப்பட்ட மீதிகள் சீஜஜிஏஎஸ் முறைமையிள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அமைச்சின் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ராஜகிரியவிலுள்ள கட்டிடமொன்றிற்காக மொத்தமாக ரூபா 1,710,000 செலுத்தப்பட்டிருந்தது அது அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவினை நடாத்துவதற்கான பிரிவினை மேற் கொள்வதற்காக வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அத்தொகை வாடகை மற்றும் வேலை முற்பணக்கணக்கு மற்றும் வாடகை வேலை முற்பண ஒதுக்கீட்டு கணக்கு என்பவற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2018நவம்பர்21ஆம்திகதிய பொது கணக்குகள் சுற்றறிக்கை இல 267/2018 இன் அடிப்படையில் வெளிநபர்களுக்கு செலுத்தப்பட்ட வாடகை அதனுடன் தொடர்புடைய படிவங்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்பாடு. கட்டிட உரிமையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தகாசுவைப்பினை பதிவு செய்து கொள்வதற்காக எதிர்காலத்தில் பொது கணக்குகள் சுற்றறிக்கை இல 267/2018 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**1.6.2** ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சீஐஜிஏஎஸ் இல் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 8,279.2 மில்லியன் பெறுமதியான ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி மாத்திரமே நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சினால் சொந்தமாக்கப்பட்ட கணணி முறைமைப்படுத்தப்பட்ட சொத்துக்களிள் உள்ளடக்கப்பட்டிராத அந்த சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் சரியான முறையில் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் சொந்தமாக்கப்பட்ட அல்லது எடுத்துக்கொள்ளப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கொண்டு வரும் பெறுமதி அல்லது மீள் மதிப்பீட்டு பெறுமதி பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளிற்கு ஏற்ப நிதிக்கூற்றுக்களில் கட்டாயம் உள்ளடக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் எடுத்துக் கொள்ளப்பட்ட ரூபா 130,600,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்ட 12 வாகனங்கள் சீஐஜிஏஎஸ் கணணி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அலுவலக உபகரணங்களை பயன்படுத்துகின்றது என்றாலும் இதுவரை உரிமைத்துவம் அந்த அமைச்சினால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒரு காலத்தில் ஒப்பந்தம் பூர்த்தியாக்கப்பட்டால் அது சீஐஜிஏஎஸ் கணணி முறைமையில் செயல்படுத்தப்பட்டிருக்கும். |
| (ஆ) ஆதனம் பொறி மற்றும் உபகரண கணக்கின் ஆரம்ப மீதிகளில் பிரதிபலிக்கப்பட்டிருந்த ரூபா 671.34 மில்லியன் பெறுமதியான வேறுபாடு காணப்பட்டதுடன் முன்னைய வருட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ள ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் மீதி அப் பெறுமதியால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | பொதுப்பேரேட்டில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தல்களும் செய்யப்படல் வேண்டும். | சீஐஜிஏஎஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் 2017 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களின் சொத்துக்கள் தயாரிப்பின் போது உரிய சொத்துக்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றாலும் 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் உள்ள சொத்துக்களின் பெறுமதி சரியாக இருந்தது. |

### 1.6.3 மூலதனச் செலவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உயர்கல்வி அமைச்சினால் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினுடைய தொழிநுட்ப நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் மாற்றுகை செயற்திட்டத்திற்காக 06 வருடத்திற்குள் மீளச்செலுத்தும் அடிப்படையில் 2 வரத்தக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட ரூபா 10,291.2 மில்லியன் பெறுமதியான கடன் நிதிக்கூற்றுக்களில் ஒரு குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பில் அனைத்து கடமைகளும் பொறுப்புக்களும் அத்தகைய நிதிக்கூற்றுக்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பின் போது நிதிக்கூற்றக்களின் ஒரு குறிப்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்கொடுப்பணவுகளை இணக்கம் செய்வதற்கான கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 683,637 செலுத்தப்படாத மீதியொன்று இருந்தது, அது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம், இராஜினாமா மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. அந்த நிலுவைகள் 3 மாதங்கள் தொடக்கம் 28 வருடங்கள் வரையான வீச்சுக்குள் இருந்தது. | உரிய சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் செலுத்தப்படாத மீதிகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதுவரை செலுத்தப்பட்டிராத மூன்று நிலுவைக்கடன் மீதிகளின் மீதான சரியான தகவல்களை கண்டுபிடிப்பது சாத்தியமற்றதாகும். சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களின் மீதிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு சட்டநடவடிக்கை எடுக்கப்படும். தொழிநுட்ப கற்கைகள் மற்றும் பயிற்சியளிப்பு திணைக்களத்தின் கீழான ரூபா 175,594 பெறுமதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருந்தன. |

### 1.6.5 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழேயுள்ள சில இடாப்புக்கள் பேணப்படாது இருந்ததுடன் இன்றய திகதி வரை சில ஆவணங்கள் வைத்திருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** பாதுகாவளர் பதிவேடு | | |
| பாதுகாப்பு வழங்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல் பற்றிய தகவல்களை உள்ளடக்கி பாதுகாவலர் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு தரவேண்டிய தேவைப்பாடுடைய ஊழியர்களின் பட்டியல் நிதிப்பிரமான இல 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கி பேணப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதாணிப்புக்களுடன் உடன்பாடு. |
| **(ஆ)** மின் பொருத்துகைகளுக்கான பதிவேடு | | |
| மின் பொருத்துகைகளுக்கான பதிவேடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசகட்டிடங்களில் உள்ள அனைத்து மின் பொருத்துகைகள் மற்றும் உபகரணங்களின் இருப்புக்கள் நிதிப்பிரமானம் 454(2) இன் பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும். | நான் எதிர்காலத்தில் மின் உபகரணங்களின் பட்டியல் ஒன்றை பேணுவதற்கான அறிவுருத்தல்களை வழங்குவதற்கு குறிப்புக்கள் எடுத்திருக்கின்றேன். |
| **(இ) நட்டங்களிற்கான பதிவேடு** | | |
| நட்டங்களுக்கான பதிவேடு மேம்படுத்தப்பட்டிருந்தது. | நட்டங்களின் பதிவேடு நிதிப்பிரமானம் 110 இன் ஏற்பாடுகளிற்கு ஏற்ப மேம்படுத்தப்பட வேண்டும். | அது பராமரிக்கப்படுகின்றதுடன் மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. |
| **(ஈ)** பொறுப்புக்களிற்கான ஒரு பதிவேடு | | |
| பொறுப்புக்களிற்கான ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பொறுப்புப்பதிவேட்டில் பதிவு செய்யப்படல் வேண்டும் அது நிதிப்பிரமானம் 214 இன் விதிமுறைகளின் பிரகாரம் முறையாக சரிபார்க்கப்பட | பொறுப்பு பதிவேட்டினை பராமரிப்பதற்கு எல்லா பிரிவிற்கும் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய திகதி வரை அந்த ஆவணங்கள் |

| | | |
|---|---|---|
| | முடியும். | வைத்திருக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த குறிப்பெடுத்துள்ளேன். |

### 1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | அமைச்சின் கருத்துரைகள் |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுகளிற்காக ஒரு செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை விருத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டதை உறுதி செய்யப்படும் மற்றும் முறைமையின் வினைத்திறன் காலத்திற்கு காலம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டியதுடன் முறைமையினை திறன்பட பராமரிப்பதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படுகின்றது. அந்த மதிப்பாய்வின் எழுத்து வடிவிலான பிரதி கணக்காய்வு தலைமை அதிபதிக்கு வழங்கப்பட வேண்டும் என்றாலும் அவ்வாறான மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளுடன் உடன்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்பாடு. காலாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது மதிப்பாய்வினை மேற்கொள்வதற்கு படிமுறைகள் எடுக்கப்படும் என்பதுடன் தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாடுகளிற்காக வினைத்திறனான உள்ளக கட்டுப்பாடு ஒன்று இருக்கின்றதா என்பதை உறுதிப்படத்திக் கொள்ள காலாண்டு அடிப்படையில் அறிக்கை இடப்படல் வேண்டும். |

### 1.6.7 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை தொடர்பாக பின்வரும் அதானிப்புக்கள் இடம்பெற்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான குறிப்புரை** | **இணங்காமை** | | |
| (அ) நிதிப்பிரமானம் 104(4) | வாகன விபத்துக்களுக்கான ஒரு முழுமையான அறிக்கை விபத்திலிருந்து மூன்று மாதங்களிற்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனாலும் இந்த ஆண்டின் போது | நிதிப்பிரமானங்களுடன் இணங்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்த இரண்டு விபத்துகளிற்கான அறிக்கைகள் 2019 ஜுன் 12 இல் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல 02/2017 இன் 02 (11) ஆம் பந்தி | சுற்றறிக்கை நிபந்தனைகள் அமைச்சிற்கு ஒதுக்கப்படடிராத ஒன்பது வாகனங்கள் மற்றும் மற்றொரு அமைச்சிற்கு கொடுக்கப்பட்டிருந்த ஒரு வாகனம் ஆகியவற்றின் மீது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப செயற்படல் வேண்டும். | ஏனைய அமைச்சுக்களிடமிருந்து இந்த அமைச்சினால் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த அல்லது எடுத்துக் கொள்ளப்படவிருந்த ஒன்பது வாகனங்கள் மாத்திரமே உள்ளது. |
| (இ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய பொது நிதிச்சுற்றறிக்கை இல 05/2016 | சுற்றறிக்கை நிபந்தனைகளிற்கு ஏற்ப, கணக்கெடுப்பு குழுவின் அறிக்கைகளின் பிரகாரம் வெளிப்படுத்தியிருந்த, செலவு விடயங்களின் 171 உருப்படிகளின் குறைபாடுகள் மற்றும் செலவு விடயங்களின் 137 உருப்படிகளின் அதிகரிப்புக்கள் என்பன தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப செயற்படல் வேண்டும். | குறைபாடுகள் மற்றும் அதிகரிப்புக்கள் மோசடி, முறைகேடு அல்லது தவறான வழியிலான உத்தியோகத்திலிருந்து உருவாகவில்லை. குறைபாடுகள் மற்றும் அதிகரிப்புக்கள் புத்தகங்களில் பதிவு செய்தலின் விடுபாடு காரணமாகவே எழுந்திருந்தது. புத்தகங்களில் அவைகளை சரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |

## 2. நிதி விமர்சனம்

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு செய்யப்பட்ட ரூபா 212,471.29 மில்லியன் ஏற்பாடுகளில் மொத்தமாக ரூபா 33,950.13 மில்லியன் அல்லது 16 சதவீதம் கடந்த 05 வருடங்களுடன் தொடர்புடைய அமைச்சிற்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் பயன்படுத்தலை கணக்கிற்கு எடுக்கும் போது சேமிக்கப்பட்டிருந்தது. அதிகபட்ச சேமிப்புக்கள் இந்த ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 50 இன் விதிமுறைகளிற்கேற்ப முறையான மதிப்பீடு மற்றும் முறையான கற்கையுடனான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன்படுகிறேன். |
| **(ஆ)** அமைச்சின் 12 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 744 மில்லியன் பெறுமதியான உரிய ஏற்பாடுகள் மொத்த ஏற்பாடுகளிலிருந்து எந்த தொகையும் பயன்படுத்தாது சேமிக்கப்பட்டிருந்தன. | -செய்- | செலவுவிடையங்களுடன் தொடர்புடைய ஆரம்பகட்ட வேலைகள் நிறைவேற்றப்படாமை மற்றும் ஏனைய செயற்திட்டங்களிற்கான முற்பணத்தின்கிடைக்காத்தன்மை போன்ற காரணங்களினால் அவ் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் போகலாம். |
| **(இ)** துணைமதிப்பீட்டினால் 06 செலவு விடயங்களுடன் தொடர்புடையதாக அனுமதிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 503.8 மில்லியன் திரட்டிய தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | -செய்- | பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், நான்கு சந்தர்ப்பங்களில் அமைச்சின் நோக்கெல்லையிலான மாற்றம், பல்வேறு அமைச்சர்களின் நியமனம் மற்றும் செயலாளர்களின் மாற்றம் காரணமாக அவைகளின் ஆரம்பகட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இவ் ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) 15 வாக்குப்பதிவேடு சார்பாக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 3,174.5 மில்லியன் பெறுமதியான ஏற்பாடுகள் ஏனைய செலவு விடயங்களிற்கு முழுமையாக மற்றப்பட்டிருந்தது. | சரியாக அடயாளப்படுத்தப்பட்ட செலவு தேவைபாடுகளிற்காக மாத்திரம் பாதீட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன் படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) மொத்தமாக ரூபா 21,924.50 மில்லியன் ஏற்பாடுகள் 57 செலவுவிடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட மொத்தமாக ரூபா 63,699.1 மில்லியன் ஏற்பாட்டிலிருந்து சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த ஏற்பாடுகலிலிருந்து 25 சதவீதம் தொடக்கம் 99 சதவீத வீச்சிற்குள் இருந்தன. | கிரய மதிப்பீடுகள் முறையான எதிர்வு கூறலுடன் தயாரிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் உடன் படுவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) ஆரம்பகட்ட செலவின மதிப்பீடுகள் மற்றும் 14 செலவு விடயங்களிற்காக திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகள் என்பவற்றிக்கு இடையிலான வேறுபாடு ரூபா 1,743 மில்லியனாக இருந்ததுடன் அது 25 சதவீதம் தொடக்கம் 253 சதவீதம் வரையான வீச்சிற்குள் கானப்பட்டது. | ஆரம்பகட்ட செலவின மதிப்பீடுகள் சரியாகவும் தத்ரூபமாகவும் தயாரிக்கப்படல்வேண்டும். | அமைச்சின் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக் கிடையில் முகாமை செய்வது கடினமாக காணப்பட்டது. அத்தியவசியமான செலவீடுகள் ஏற்பட்ட போது மத்திரமே செலவின மதிப்பீடுகள் மாற்றியமைக்கப்பட்டது. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடைமைகளிற்குள் உள்ளாகுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான மொத்த செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 87,172.35 மில்லியன் பெறுமதியாக இருந்ததன் பெறுபேராக பொறுப்பு ஆவணங்கள் முறையாக மேற்பார்வை செய்து செலுத்தப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 214 உடன் இணங்க வேண்டும். | பொறுப்பு பதிவேட்டை மேற்பார்வை செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ)வருடாந்த பாதீட்டு | 2017 ஏப்ரல் 21 ஆம் திகதிய பொது | நெடுஞ்சாலை அமைச்சின் வருடாந்த மதிப்பீட்டின் |

| | | |
|---|---|---|
| வரையரைகள் கடமைகளிற்கு அப்பால்பட்டு இல்லாது இருக்க வேண்டும் என்றாலும், மொத்த ஏற்பாடுகளிற்கு மேலாக 65 செலவு விடயங்கள் சார்பாக ரூபா 59,667 மில்லியன் பெறுமதியான ஒப்படைப்புக்கள் அமைச்சினால் செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சுற்றறிக்கை இல 255/2017 இன் பிரகாரமானஏற்பாடுகளின் வரையரைகளிற்குள் செலவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வரையறைகள் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு பூர்த்தியாக்களை வரையறுக்க முடியாது. மேலும் ஒப்பந்ததாரரின் ரசீதின் தாமதத்தின் பெறுபேராக உள்நாட்டு வெளிநாட்டு வட்டிசெலுத்தப்பட வேண்டிருக்கும். செயற்திட்டத்தின் கிரயம் அதிலிருந்து அதிகரித்திருந்தது. துரிதப்படுத்தப்பட்ட விடுதி செயற்திட்டத்தின் நிர்மான ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரசீதின் காரணமாக நெடுஞ்சாலை அமைச்சின் மொத்த பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 216 மில்லியன் ஆனதுடன் ஏற்பாடுகள் காலாதியடைந்திருந்தன. |

## 2.3 வைப்புமீதிகள்

------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் கீழ் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களை பதிவு செய்யும் போது அறவிடப்பட்ட வைப்பு பணங்கள் அவ் உயர் கல்வி நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் தொடர்புடய 42 நிறுவனங்களிடமிருந்தான மொத்தமாக ரூபா 24,720,487 பெறுமதியான அறவிடப்பட்ட வைப்புக்கள் எந்த கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிற்காவும்பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட்ட வைப்புபணம் தாமத மில்லால் கட்டுப்படுத்தும் அதிகாரசபையின் பயிற்சித் திட்டங்களிற்காக பயன்படுத்தப்படல் வேண்டும். | அரச சார்பற்ற உயர்கல்வி துறையின் மீளாய்வு வேலைகளில் கலந்து கொள்ள விருப்பப்படும் செலவு விடய நிபுனர்களின் குழுவின் நிறுவுதல் பாடங்களின் பல்வேறு துறைக்களிலுள்ள 57 நிபுனர்களிற்கான விழிப்புனர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், பட்டங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட்ட நிறுவணங்களின் நிறுவன தலைவர்களிற்கான பயிற்சிபட்டரைகளை நடாத்துதல், நிறுவனம் சார்ந்த மீளாய்விற்காக குறைந்தபட்ச நியமங்களை தொகுப்பதற்கு குழுவொன்றை நியமித்தல் மற்றும் வெளிநாட்டு மாணவர்களிற்கு அயல் நாட்டு நுழைவுச் சான்றுகளை வழங்குவதற்கான பொது கொள்கையை தயாரித்தல் போன்றன 2018/2019 ஆம் ஆண்டிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உயர் கல்வி அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான வேலைதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அடுத்த இரண்டு வருடங்கள் அல்லது மூன்று வருடங்களிற்குள் அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரியவருடங்களில் கூறப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வேலைத்திட்டத்திற்கு அந்த நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான தந்திரோபாய திட்டத்தில் விபரிக்கப்பட்டிருந்த எதிர்வரும் வருடத்திற்கான இலக்குகள் 2017 ஆம் ஆண்டிற்கான திட்டத்திலிருந்து வேறுபட்டிருந்தது. இதற்கான காரணம் உரிய பல்கலைக்கழக முறைமை மற்றும் செய்யப்பட்ட ஆய்வுகள் மூலமாக செய்யப்பட்ட கலந்துரையாடல்கள் ஆகும். அந்த யோசனைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் சில பகுதிகள் பெறப்பட வேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. |

### 3.2 நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தோல்வி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம், 03 இலக்குகளின் கீழான 07 நோக்கங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை அடைந்து கொள்வதற்கு அமைச்சினால் 25 செயற்திட்டங்களிற்காக ரூபா 11,662.11 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்பட்டன. | | |
| (i) முதலாவது இலக்கின் கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு 2019 இல் பூர்த்தியாக்குவதற்கு | வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை உரிய நேர கட்டமைப்பிற்குள் அடைந்து கொள்ள | செயலாற்றலை தேவைக்கு ஏற்ப அடைந்துகொள்வதற்கு ஆலோசனை நிறுவனத்தின் தெரிவு செய்தலின் மாற்றம், பலவேறு பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட கிழக்கு பல்கலைக் கழகத்திற்கான சுகாதார விஞ்ஞானத்திற்கான பிரிவின் கட்டிட தொகுதியினை நிர்மானிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. உண்மையாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,88.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மொத்தமாக ரூபா 31.3 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிதிச் செயற்பாடு 10 சதவீதமானதுடன் பௌதீக செயலாற்றல் 14 சதவீதமாக இருந்தது இது மீளாய்வாண்டின் இறுதியில் குறைந்த அளவில் காணப்பட்டது. | நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்படல் வேண்டும். | சூழ்நிலைகளில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் திட்டத்தினை மாற்றியமைப்பதற்கு மேலதிக நேரசெலவீடு, ஒப்பந்தத்தை வழங்குவதில் தாமதம், பதவி வெற்றிடங்களை அனுமதிப்பதில் தாமதம் மற்றும் முற்பண கொடுப்பணவுகளை செலுத்துவதற்கு போதியளவு நிதியின் குறைபாடு போன்ற காரணங்களால் திட்டமிட்டதுடமிடன் 156 நாட்கள் அதிகமாக செலவிடப்படுதல் தடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | இரண்டாம் கட்டத்தின் கீழ், ஆகக்குறைந்தது 3 மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களின் தரத்தினை அதிகரிப்பதன் மீதான பல்கலைக்கழகங்களின் உலக தரப்படுத்தல் ரீதியில் முதல் 1000 ற்கு இடையிலும் 06 பல்கலைக்கழகங்களைமுதல் 2000 இற்குள்ளும் ஏனைய பல்கலைக்கழகங்களைமுதல் 5000 இற்குள்ளும் கொண்டுவருவதாகும். இருப்பினும், ஒரு மாநில பல்கலைக்கழகம்கூடமுதல் 1000 இனை அடைந்திருக்காதுடன் ஒரு பல்கலைக்கழகம் மாத்திரமே முதல் 2000 | பாடத்திட்டத்தின் தரத்தினை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்காக இலங்கை பல்கலைக்கழகங்கள் உலக தரப்படுத்தலிற்கு ஏற்ப மேம்படுத்த முடியும். . | உயர் கல்விப்பகுதியில் ஒரு மையமாக இலங்கையினை கொண்டுவருவதற்கான தொலைநோக்கு பார்வையுடன் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பயன்படுத்த முடியுமான பாரிய கிரய சுட்டெென் காரணமாக செலவில்லாத ஆனால் குறைந்தபட்ச சர்வதேச ஏற்புக்களை கொண்ட “**வெபோமெட்றிக**” சுட்டெனை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பலன்கள் பெறப்பட்டிருந்தன அவைகள் சில அவர்களின் நிலையினை மதிப்பிட தேவையான தந்திரோபாயத்தினை பயன்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தலிலிருந்து சில வருடங்களிற்குள் பல்கலைக் கழகங்களுக்கிடைய நிறைவு செய்தலை தயாரித்தல், முதல் காலப்பகுதியில் இடங்களை வினைத்திறனுடன் மாற்றல், சுட்டெனை பயன்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| இற்குள் அடைந்திருந்தது. மேலும் 10 எஞ்சிய பல்கலைக்கழகங்கள் 5000 என்ற வரையறைக்கு மேல் தரப் படுத்தப்பட்டிருந்தநேரத்தில் 08 பல்கலைக்கழகங்கள் 2000-5000 என்ற வீச்சுக்குள் இருந்தது. | | எவ்வித செலவும் ஏற்படாது, இலங்கை பல்கலைக் கழகங்களின் தரவரிசை வடிவங்கள் மற்றும் இடைவெளிகளை அடயாளப்படுத்த முடியும். |
